‘கருணாநிதி பெயரில் மக்களுக்கு பயன்படாத திட்டங்களுக்கு கோடிக்கணக்கில் நிதியை ஒதுக்குவதா’? அரசுக்கு எடப்பாடி கண்டனம்

சென்னை, நவ.8–

‘மக்கள் நலத் திட்டங்களுக்கான மூலதனச் செலவுகளை மேற்கொள்ளாமல், கருணாநிதி பெயரில் மக்களுக்குப் பயன்படாத திட்டங்களுக்கு கோடிக்கணக்கான நிதியை ஒதுக்குவதா’ என்று கேள்வி எழுப்பி, தி.மு.க. அரசுக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

அம்மா ஆட்சியில் மக்கள் நலனுக்காகத் தொடங்கப்பட்ட திட்டங்கள் என்ற ஒரே காரணத்திற்காக, திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற 42 மாதங்களில், பல திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யாததால், அவை முழுமையாக முடிக்கப்படாமலும், கிடப்பிலும் போடப்பட்டுள்ளன. உதாரணமாக,

★ விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஒன்றியம், கூனிமேடு கிராமத்தில் இருந்து தினமும் நாள் ஒன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் (MLD) கடல் நீரை குடிநீராக்கும் சுமார் ரூ. 1,500 கோடி மதிப்பீட்டிலான திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

★ விழுப்புரம் மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட எல்லையில், அழகன்குப்பம் பக்கிங்ஹாம் கால்வாயிலும், ஆலம்பராகோட்டை அருகிலும் சுமார் ரூ.235 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ விழுப்புரத்தில் ஜெயலலிதா பல்கலைக்கழகம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ காவிரியின் குறுக்கே ஆதனூர் குமாரமங்கலம் தடுப்பணை காலதாமதமாக பணிகள் நடைபெறுகின்றன.

★ காவிரியின் குறுக்கே நஞ்சை புகளூர் கதவணையுடன் கூடிய தடுப்பணை காலதாமதமாக பணிகள் நடைபெறுகின்றன. அத்திக்கடவு – அவினாசி திட்டம் முழுமையாக செயல்படுத்தவில்லை.

★ காவிரி உபரி நீரினை 100 ஏரிகளில் நிரப்பும் திட்டம் முழுமையாக செயல்படுத்தவில்லை.

★ தலைவாசல் கால்நடைப் பூங்கா திறக்கப்படவில்லை. தென்காசி ஜம்புநதி மேல்மட்டக் கால்வாய் திட்டப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

★ திருநெல்வேலி இரட்டைகுளம் முதல் ஊத்துமலை வரை கால்வாய் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கப்படவில்லை.

★ ரூ. 125 கோடி மதிப்பீட்டிலான மதுராந்தகம் ஏரி தூர் வாரும் பணி மூன்றாண்டுகளாக பணியில் தொய்வு.

இவ்வாறு விவசாயிகள், பொதுமக்கள் என்று அனைவருக்கும் பயன்படும் பல திட்டங்களை இந்த திராவிட மாடல் அரசு கிடப்பில் போட்டுள்ளதை அடுக்கிக்கொண்டே போகலாம். மக்கள் நலத் திட்டங்களுக்கான மூலதனச் செலவுகளை மேற்கொள்ளாமல், அத்தியாவசியமற்ற செலவுகளை ஸ்டாலினின் தலைமையிலான தி.மு.க. அரசு செய்து கொண்டிருக்கிறது. தமிழக மக்களுக்கு சிறிதும் பயனளிக்காத கார் ரேஸ் நடத்தப்படுகிறது. கருணாநிதி பெயரில் அவசியமற்ற பணிகள் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னை கடலின் நடுவே கலைஞர் பேனா சிலை அமைப்பதற்கு நிதி ஒதுக்க முனைப்பு காட்டப்படுகிறது. மேலும், சென்னை முட்டுக்காட்டில் ஐந்து லட்சம் சதுர அடியில், 487 கோடி ரூபாய் செலவில் கலைஞர் பன்னாட்டு அரங்கம் அமைப்பதற்கு இந்த திராவிட மாடல் அரசு டெண்டர் கோரியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், தென்பெண்ணை ஆற்றினை, பாலாற்றுடன் செய்யாறு வழியாக இணைக்கவும் மற்றும் நந்தன் கால்வாய்க்கு பாசன வசதியை உறுதி செய்யவும், இணைப்புக் கால்வாய் வெட்டும் திட்டத்தினை மேற்கொள்ள சுமார் 320 கோடி ரூபாய் தேவைப்படும் என்ற நிலையில், திமுக ஆட்சியில் இத்திட்டத்தில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. வட தமிழ்நாடு குறிப்பாக, விவசாயப் பெருமக்கள் பெருமளவில் பயனடையும் இத்திட்டத்திற்கு, திமுக அரசு நிதி இல்லை என்ற காரணத்தைக் காட்டி கிடப்பில் போட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல ஆண்டுகளாக தமிழக விவசாயிகள் நதிநீர் இணைப்புக்காக பல போராட்டங்கள் நடத்தி வரும் நிலையில், திராவிட மாடல் அரசு அதில் கவனம் செலுத்தாமல் பன்னாட்டு அரங்கம் கட்டுவதற்கு முனைப்பு காட்டுவதற்கான காரணம் என்ன? உள்நாட்டு நதிநீர் இணைப்புத் திட்டங்களை, வருகின்ற பத்து ஆண்டுகளில் செயல்படுத்தாவிட்டால், தமிழகத்தில் பல மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

மு.க. ஸ்டாலின், அவரது தந்தை பெயரை அரசு கட்டிடங்களுக்கு வைக்க வேண்டுமென்றால், அவரது அறக்கட்டளை சார்பில் அப்பணிகளை மேற்கொள்ளலாம். போதிய நிதி இல்லாமல் மக்கள் நலத் திட்டங்கள் பல முடக்கி வைக்கப்பட்டுள்ளன. எனவே, உடனடியாக தேவையான நிதியினை அத்திட்டங்களுக்கு முழுமையாக ஒதுக்கீடு செய்ய தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தமிழகத்தில் தனியார் பால் விலை உயர்வு: மக்கள் அதிர்ச்சி

சென்னை, நவ.8–

தமிழகத்தில் இன்று முதல் தனியார் பால் விலை லிட்டருக்கு ரூ.2 வரை உயர்ந்துள்ளது. இந்த திடீர் விலை உயர்வால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் ஆவின் பால் மட்டுமின்றி பல தனியார் நிறுவனங்களின் பால் பாக்கெட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தனியார் நிறுவனங்கள் சுமார் 1.50 கோடி லிட்டர் பால் பாக்கெட்டுகளை விற்பனை செய்து வருகின்றன. ஆவின் பாலை விட தனியார் நிறுவன பால் விலை அதிகமாக உள்ளது. இந்த நிலையில் தனியார் பால் விற்பனை விலை இன்று முதல் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஆவின் பாலுக்கு அடுத்து அதிக அளவில் விற்பனையாகும் தனியார் பால் நிறுவனமான ஆரோக்யா பால் நிறுவனம் இன்று முதல் லிட்டருக்கு ரூ.2 உயர்த்தியுள்ளது. இதையடுத்து ஒரு லிட்டர் ரூ.65க்கு விற்பனையாகி வந்த ஆரோக்யா பால் இன்று முதல் ரூ.67க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த திடீர் விலை உயர்வால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

அடிக்கடி தன்னிச்சையாக தனியார் நிறுவனங்கள் பால் விலையை உயர்த்துவதை வரைமுறைப்படுத்த பாலுக்கான விலையை அரசே நிர்ணயம் செய்யும் வகையில் பால் கொள்முதல் மற்றும் விற்பனை விலை ஒழுங்கு முறை ஆணையம் ஒன்றை அமைக்க வேண்டும் என தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச்சங்கம் பல முறை அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்து குறிப்பிடத்தக்கது.

விஏ டெக் வபாக் லிமிடெட்

WABAG Sustainable solutions, for a better life

CIN : L45205TN1995PLC030231

பதிவு அலுவலகம்: “வபாக் ஹவுஸ்”

எண்.17, 200 அடி துரைப்பாக்கம் - பல்லாவரம் பிரதான சாலை, சுண்ணாம்பு கொளத்தூர், சென்னை-600 117, தமிழ்நாடு, இந்தியா

தொலைபேசி:+91-44-6123 2323 | தொலைநகல்: +91-44-6123 2324

இணையதளம்: www.wabag.com | மின் அஞ்சல்: companysecretary@wabag.in

30.09.2024-ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான நிதி முடிவுகளின் (தணிக்கை செய்யப்பட்டாத) அறிக்கை

(ரூபாய் மில்லியனில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு		முடிந்த அரையாண்டு	முடிந்த ஆண்டு
	30.09.2024	30.09.2023	30.09.2024	31.03.2024
	தணிக்கையாகாதது	தணிக்கையாகாதது	தணிக்கையாகாதது	தணிக்கையானது
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகர)	7,141	6,804	13,460	28,998
இக்காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்)	924	829	1,624	3,301
வரிக்கு முன் இக்காலத்திற்கான நிகர இலாபம்/(நஷ்டம்) (விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்)	924	829	1,624	3,301
வரிக்கு பின் இக்காலத்திற்கான நிகர இலாபம்/(நஷ்டம்) (விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்)	703	601	1,251	2,504
வரிகள், சிறுபான்மையினர் நலன் மற்றும் இணை நிறுவனங்களின் இலாபம்/(நஷ்டத்தில்) பங்கு ஆகியவற்றிற்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	706	602	1,256	2,456
இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான இலாபம் (நஷ்டம்) உள்ளடக்கியது (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)	892	551	1,421	2,510
சமபங்கு மூலதனம்	124	124	124	124
ஒரு பங்கிற்கான வருவாய் (ரூ.2/-ஒன்றுக்கு) (தொடரும் மற்றும் தொடரா செயல்பாடுகளுக்கு) (ரூபாயில்)				
அடிப்படை:	11.35	9.68	20.20	39.49
நீர்த்த:	11.19	9.68	19.90	39.49

குறிப்புகள்:

1. மேற்கண்ட முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்க்கான நிதிநிலை முடிவுகள், இந்திய பத்திரங்கள் மற்றும் பத்திரமாற்று விதிமுறைகள் வாரியத்தின் (SEBI) (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் தேவைகள்) 2015-விதிமுறையின் விதி 33-ன் கீழ் பங்கு சந்தைகளின் தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கமாகும். இதன் முழு விவரங்கள் பங்கு சந்தைகளின் இணையதளங்கள் www.nseindia.com, மற்றும் www.bseindia.com, மற்றும் இந்நிறுவனத்தின் இணையதளம் www.wabag.com-லும் உள்ளன.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கையாளர் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு மற்றும் 07.11.2024 அன்று நடைபெற்ற இயக்குநர் குழு கூட்டத்தில் இயக்குநர் குழுவினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு பதிவிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது மற்றும் நிறுவனத்தின் சட்டபூர்வ தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.
3. தற்போதைய காலகட்டத்தில் வழங்கப்பட்ட புள்ளிவிவரங்களை உறுதிப்படுத்த முந்தைய காலகட்டங்களின் புள்ளிவிவரங்கள் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன/மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன.
4. தனித்துள்ளது அடிப்படையில் (Standalone basis) விற்று முதல், வரிக்கு முன் இலாபம், வரிக்கு பின் இலாபம் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் மில்லியனில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு		முடிந்த அரையாண்டு	முடிந்த ஆண்டு
	30.09.2024	30.09.2023	30.09.2024	31.03.2024
	தணிக்கையாகாதது	தணிக்கையாகாதது	தணிக்கையாகாதது	தணிக்கையானது
விற்று முதல்	6,133	6,041	11,592	25,097
வரிக்கு முன் இலாபம் / (நஷ்டம்)	783	746	1,445	3,160
வரிக்கு பின் இலாபம் / (நஷ்டம்)	576	541	1,081	2,358

விஏ டெக் வபாக் லிமிடெட்-க்காக
ஒப்பம்
ராஜீவ் மிட்டல்
தலைவர் & மேலாண்மை இயக்குநர்
DIN : 01299110

தேதி: 07.11.2024
இடம்: சென்னை

சென்னை போலீசாரிடம் வாக்கு வாதம்: சந்திரமோகன், தனலட்சுமிக்கு ஜாமீன்

சென்னை, நவ.8–

சென்னை மெரினாவில் காவல்துறையிடம் அநாகரீகமாக நடந்து கொண்ட சந்திர மோகன் மற்றும் தனலட்சுமி ஆகியோருக்கு ஜாமீன் வழங்கி சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மெரினா லூப் சாலையில் நின்று கொண்டிருந்த நான்கு சக்கர வாகனத்தை ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த காவல் துறையினர் எடுக்குமாறு கூறியபோது, சந்திர மோகனும் அவரது தோழி தனலெட்சுமியும் காவல் துறையினரை ஆபாசமாக திட்டினர்.

இதையடுத்து, மயிலாப்பூர் காவல்துறையினர் அளித்த புகாரின் அடிப்படையில், சந்திரமோகன் மற்றும் அவரது தோழி தனலட்சுமி மீது ஆபாசமாக திட்டுதல், அரசு ஊழியரை பணி செய்யவிடாமல் தடுத்தல், கொலை மிரட்டல், உட்பட 5 பிரிவுகளின் கீழ் மயிலாப்பூர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட, சந்திரமோகன் மற்றும் தனலட்சுமி ஆகியோரின் ஜாமீன் மனுக்களை சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்த நிலையில், ஜாமீன் கோரி இருவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்கள் நீதிபதி ஏ.டி.ஜெகதீஸ்சந்திரா முன்பு விசாரணைக்கு வந்தபோது, இருவரும் பொதுமக்களுக்கு தொந்தரவு ஏற்படுத்தும் வகையில் இருவரும் நடந்து கொண்டதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்காக எவ்வளவு நாட்கள் இருவரையும் சிறையில் வைக்க போகிறீர்கள் என காவல்துறைக்கு கேள்வி எழுப்பிய நீதிபதி, இருவருக்கும் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார். மேலும், சந்திரமோகன் மட்டும் தினசரி தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என நிபந்தனை விதித்தார்.

அண்ணா தி.மு.க. நிர்வாகி மரணம்: எடப்பாடி இரங்கல்

சென்னை, நவ.8–

நத்தம் எருமநாயக்கன்பட்டி அண்ணா தி.மு.க. கிளைச் செயலாளர் எஸ்.என்.சக்திவேல் காலமானார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

முன்னாள் அமைச்சர் நத்தம் இரா. விசுவநாதனின் மைத்துனரும்; நத்தம் தெற்கு ஒன்றியம், புன்னப்பட்டி ஊராட்சி, எருமநாயக்கன்பட்டி கிளைக் கழகச் செயலாளரும், உலுப்பகுடி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவருமான எஸ்.என்.சக்திவேல் மாரடைப்பால் மரணமடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றேன்.

அன்புச் சகோதரர் சக்திவேல் சிறு வயது முதல் கழகத்தின் மீதும், கழகத் தலைமையின் மீதும் மிகுந்த விசுவாசத்துடன், கழகப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு பணியாற்றி வந்தவர். மைத்துனரை இழந்து மிகுந்த வேதனையில் வாடும் அன்பு அண்ணன் நத்தம் விசுவநாதனுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், சக்திவேல் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் அமைதிபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

டுவென்டிபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: G–3, பழைய எண். 28ஏ, புதிய எண். 67, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை– 600 018.

CIN: L74210TN1986PLC012791 | Tel: 022 24156538, Fax: 022 24115260 | Website: www.tcms.bz, Email: investors@tcms.bz

30 செப்டம்பர், 2024–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	தனியானது			ஒருங்கிணைந்தது		
	முடிந்த காலாண்டு		முடிந்த ஆண்டு	முடிந்த காலாண்டு		முடிந்த ஆண்டு
	30/09/2024	30/09/2023	31/03/2024	30/09/2024	30/09/2023	31/03/2024
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	200.09	278.71	3491.81	1401.43	278.71	3855.42
சாதாரண செயல்பாடுகளில் வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்)	44.01	233.94	3223.03	241.36	230.00	3217.31
வரிக்குப் பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	44.01	233.94	3223.03	241.36	230.00	3217.31
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (வரிக்கு பின் காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) மற்றும் வரிக்கு பின் இதர விரிவான வருமானம் உள்ளடக்கியது)	515.07	769.29	3321.23	2140.42	1065.32	3338.43
சம பங்கு மூலதனம்	1050.00	1050.00	1050.00	1050.00	1050.00	1050.00
ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10 /– (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) அடிப்படை மற்றும் பலமிழந்தது	0.42	2.23	30.70	2.30	2.19	30.64

குறிப்புகள்:

1. மேற்கண்ட முடிவுகள் தணிக்கை குழுவினால் ஆய்வு செய்து பரிந்துரைக்கப்பட்டு 7 நவம்பர், 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல்அளிக்கப்பட்டன.
2. செபி கட்டுப்பாடுகள், 2015–ன் கீழ் (பட்டியல் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 33–ன் கீழ் 30 செப்டம்பர், 2024–ல் முடிந்த காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரத்தின் சுருக்கம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் என்எஸ்இ மற்றும் பிஎஸ்இ இணையதளங்களான www.nseindia.com மற்றும் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.tcms.bz–ல் கிடைக்கும்.
3. கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் அறிவிக்கப்பட்ட இந்திய கணக்கியல் தர நிலைகளின்படி (இந்த் ஏஎஸ்) மேற்கண்ட முடிவுகள் உள்ளது.

குழு உத்தரவுப்படி
சுந்தர் ஐயர்
தலைமை செயல் அதிகாரி

இடம்: மும்பை
தேதி: 07.11.2024

விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்

(CIN - U65929TN2019PTC127644)

பதிவு அலுவலகம் : பிரஸ்டிஜ் ஜக்ரியா மெட்ரோபாலிடன், எண்.200/1-8, 1வது தளம், பிளாக்-1, அண்ணா சாலை, சென்னை 600002.

செப்டம்பர் 30, 2024 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகள்

[செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்), விதிகள் 2015ன் விதி 52(8) மற்றும் 52(4)]

(₹ லட்சங்களில்)

வ. எண்	விவரங்கள்	செப்டம்பர் 30, 2024ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது)	செப்டம்பர் 30, 2023ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது)	மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது)
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	1,345.58	1,105.95	4,819.24
2.	காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்)	106.46	(140.86)	(269.98)
3.	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்)	106.46	(140.86)	(269.98)
4.	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்)	77.53	(104.95)	(205.93)
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	71.50	(106.85)	(217.51)
6.	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	2,038.58	1,691.55	2,038.58
7.	நிலுவையில் உள்ள கட்டாயமாக மாற்றக்கூடிய முன்னுரிமை பங்குகள்	992.95	992.95	992.95
8.	ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக)	(3,177.07)	(3,149.34)	(3,128.71)
9.	பங்கு பிரீமியம் கணக்கு	17,171.74	12,799.77	17,172.25
10.	நிகர மதிப்பு	17,026.20	12,334.93	17,075.08
11.	செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை	3,518.73	5,671.65	3,800.87
12.	நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள்	NA	NA	NA
13.	கடன் பங்கு விகிதம்	0.20	0.45	0.22
14.	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) 1. அடிப்படை 2. டைலூட்டட்	0.24 0.23	(0.59) (0.59)	(0.73) (0.73)
15.	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	NA	NA	NA
16.	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	NA	NA	NA
17.	கடன் சேவை கவரேஜ் விகிதம்	0.76	0.38	0.09
18.	வட்டி சேவை கவரேஜ் விகிதம்	2.58	0.18	1.03

குறிப்பு :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் பாம்பே ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (BSE: www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.vivritiamc.com) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52(4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்சேஞ்(பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com)ல் அணுகலாம்.

விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN: 06848801

இடம் : சென்னை
தேதி : நவம்பர் 06, 2024

மெர்க்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட்

Mercantile

CIN: L65191TN1985PLC037309

பதிவு அலுவலகம் : 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை - 600 032. Tel: 044-40432209

மின்னஞ்சல்: admin@mercantileventures.co.in இணையதளம்: www.mercantileventures.co.in

30 செப்டம்பர், 2024 அன்று முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ.லட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	ஒன்றுசேர்க்கப்பட்ட					
		முடிந்த காலாண்டு			முடிந்த அரையாண்டு		முடிந்த ஆண்டு
		30.09.2024 (தணிக்கை செய்யப்படாதது)	30.06.2024 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2023 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2024 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2023 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2024 (தணிக்கை செய்யப்பட்டது)
1.	செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம்	1,784.34	1,674.46	1,518.73	3,458.80	2,886.49	6,038.97
2.	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன், விதிவிலக்கான பொருட்களுக்கு மற்றும் அசாதாரண வகைகள்)	122.10	771.85	127.65	893.95	273.72	351.77
3.	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு முன் (விதிவிலக்கான பொருட்களுக்கு பின் மற்றும் அசாதாரண வகைகள்)	122.10	771.85	127.65	893.95	273.72	(633.73)
4.	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு பின் (விதிவிலக்கான பொருட்களுக்கு பின் மற்றும் அசாதாரண வகைகள்)	90.47	676.51	102.50	766.98	(167.68)	(776.38)
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்குப் பின்) மற்றும் கூட்டு முயற்சியிலிருந்து கிடைக்கும் வருமானம் (வரிக்குப் பின்)	449.45	2,313.63	2,292.22	2,763.08	4,317.29	3,816.26
6.	சமபங்கு மூலதனம்	11,191.82	11,191.82	11,191.82	11,191.82	11,191.82	11,191.82
7.	ஒதுக்கீடுகள் (மறுமதிப்பீடு தவிர) முந்தைய ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி	-	-	-	-	-	19,939.84
8.	ஒவ்வொரு பங்கிற்கான வருவாய் [ரூ.10/ ஒவ்வொன்றும்] (தொடர் செயல்பாடுகள் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) - அடிப்படை மற்றும் இளக்கிய (காலாண்டிற்கு ஆண்டுமயமாக்கப்படவில்லை)	0.07	0.50	0.11	0.57	0.01	(0.71)

தணிக்கை செய்யப்படாத தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் பற்றி கூடுதல் தகவல்கள் செபி ஒழுங்குமுறை 47(1)(b) (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிபடுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015

(ரூ.லட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	தனிப்பட்ட					
		முடிந்த காலாண்டு			முடிந்த அரையாண்டு		முடிந்த ஆண்டு
		30.09.2024 (தணிக்கை செய்யப்படாதது)	30.06.2024 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2023 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2024 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2023 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2024 (தணிக்கை செய்யப்பட்டது)
1.	செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம்	903.83	845.93	748.62	1,749.76	1,400.16	2,983.03
2.	நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு முன் மற்றும் விதிவிலக்கான பொருட்கள்	(10.74)	39.51	143.77	28.77	292.33	244.59
3.	நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு முன் விதிவிலக்கான பொருட்களுக்கு பின்	(10.74)	39.51	143.77	28.77	292.33	244.59
4.	வரிக்குப் பின் லாபம்	(8.03)	29.57	114.04	21.54	(2.35)	96.94

குறிப்புகள்:

அ) மேற்குறிப்பிட்ட விரிவான செப்டம்பர் 30, 2024 அன்று முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகள் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிபடுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015 கட்டுப்பாடு 33ன் படி இயக்குநர்களின் தணிக்கைக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு இயக்குநர் குழுமத்தால் ஒப்புதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்டது.

ஆ) முழு நிதி நிலை அறிக்கைகள் மும்பை பங்குச் சந்தை (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் (www.mercantileventures.co.in.) இணையதள முகவரிகளில் கிடைக்கும்.

மெர்க்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட்டிற்காக
E N ரங்கஸ்வாமி
முழுநேர இயக்குநர்
DIN: 06463753

இடம்: சென்னை
தேதி : 07.11.2024